மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

53—

கால்வாய்

*4416—**திரு. ரா. சரத்குமார்:**
திரு. பி.ஜி. இராஜேந்திரன்:

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஜம்பு நதியில் மேல்மட்டக் கால்வாய் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஜம்பு நதி மற்றும் ராமநதி உபரி நீர் மேல்மட்டக் கால்வாய்த் திட்டத்திற்கு ரூ.887 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க நான் விட்டுக்கொடுக்கக் காத்திருக்கிறேன். ஏனென்றால், பெரும்பாலான பகுதிகள் அவருடைய தொகுதியிலே வருகின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்கள் முதலில் பேசட்டும். (குறுக்கீடு) இல்லை, திரு. பி.ஜி. இராஜேந்திரன், முன் வரிசையிலுள்ள திரு. ரா. சரத்குமார் முதலில் பேசிவிடட்டும். (சிரிப்பு) நீங்கள் முதலில் பேசிவிடுங்கள்.*

2011 ஆகஸ்ட் 23]

திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. ஏறத்தாழ 35 ஆண்டுக்காலமாக தென்காசி மற்றும் ஆலங்குளம் தொகுதி மக்களின் ஒரு கனவுத் திட்டமாக இருந்துவந்த இந்தத் திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 23–6–2005 அன்று திருநெல்வேலியில் நடைபெற்ற ஒரு விழாவில் சொல்லப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டது. இந்தத் திட்டத்தைச் சென்ற மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கிடப்பில் போட்டிருந்தது. ஆனால், மீண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இந்த நல்லரசு அமைந்தவுடன் இத்திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. என் சார்பிலும் தென்காசி மற்றும் ஆலங்குளம் தொகுதிகளினுடைய மக்களின் சார்பிலும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டாவது பசுமைப் புரட்சியை அறிவித்திருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், இந்த ஆட்சியில் இதுபோன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுவது உண்மையிலேயே மகிழ்ச்சி அளிக்கிறது. இதிலே ஒரு துணைக் கேள்வி இருக்கிறது. மதிப்பீட்டுக்கு எப்போது நிருவாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்படும்? இப்பணி எப்போது துவங்கும்? எப்போது முடிவடையும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. பி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மைனாரிட்டி தி.மு.க. தீய சக்தி ஆட்சியைத் தீர்த்துக்கட்டி, ஆலங்குளம் தொகுதி மக்களுக்கு முதன்முதலாக தீயணைப்பு நிலையம் தந்து, அதனை இந்த அவையிலே அறிவித்த எங்கள் தாயே, கரியம் பாப்பாக்குடி, ஆலங்குளம், கீழப்பாவூர் ஒன்றியம், ஆலங்குளம் தொகுதி மக்களுக்கு, என்னுடைய கோரிக்கையை ஏற்று உள்ளாட்சி மானியக் கோரிக்கையில், நீண்டநாள் பிரச்சினையான தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம் தந்து தாகம் தீர்த்த தீர்க்கதரிசி அம்மா அவர்களே, 23–6–2005 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் நெல்லைச் சீமைக்கு வந்தபோது, வ.உ.சி. மணிமண்டபம் திறந்து வைத்து, சுமார் 300 கோடி ரூபாய்க்குமேல் ஏழையெளிய மக்களுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கி, சுமார் 3 கோடியே 69 இலட்சம் மதிப்பீட்டில்*

[2011 ஆகஸ்ட் 23

ஜம்பு நதி மேல்மட்டக் கால்வாய் அமைத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் தனது பொற்கரங்களால் அன்றைக்கு அடிக்கல் நாட்டினார்கள். அதன்பின் வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசின் தென்காசி சட்டமன்ற உறுப்பினரான துரோகி கருப்பசாமி பாண்டியன் அவர்களும், மணல் கொள்ளையன் முன்னாள் சபாநாயகர் ஆவுடையப்பன் அவர்களும் சேர்ந்து இந்தத் திட்டத்தை ஓரம் கட்டிவிட்டார்கள். ஆகவே, ஏழை விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் "பரிசீலிக்கப்படும்" என்று சொன்னார்கள். இந்தத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்ததால், கண்டிப்பாக நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அன்புடன் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கரங்களால் திட்டப்பட்டவை இத்திட்டங்கள். எனவே, உடனடியாக விரைந்து நடவடிக்கை எடுத்து முடிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் உங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

54—

பட்டு வர்த்தக மையம்

***759—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதியில் பட்டு வர்த்தக மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?